# காரமடை நகராட்சி

2023 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28ம் நாள் செவ்வாய்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு காரமடை நகரமன்றத்தின் சாதாரணக் கூட்டம், காரமடை நகரமன்ற கூட்டத்தில், நகரமன்றத் தலைவர் அவர்களால் கூட்டப்பட்டுள்ளது. இக்கூட்டத்தில் நகரமன்றத் துணைத்தலைவர் மற்றும் அனைத்து நகரமன்ற உறுப்பினர்கள் தவறாது கலந்துகொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**முன்னிலை : திருமதி.உஷா வெங்கடேஷ், நகரமன்றத் தலைவர்**

ஒ.ம்/ திருமதி.உஷா வெங்கடேஷ்
நகரமன்றத் தலைவர்,
காரமடை நகரமன்றம்.

---

**பொருள் : 01**

காரமடை நகராட்சி ஆணையாளரது ஜனவரி-2023 மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**
பதிவு செய்யலாம்.
(ந.க.எண்.1879/2021/இ1)

**பொருள் : 02**

அரசாணை எண்.7 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.20.01.2023ல் அம்ருத் 2.0 திட்டத்தின் கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.13 புருசோத்தமன் நகர் பகுதியில் பூங்கா அமைக்கும் பணிக்கு ரூ.42.00 இலட்சம் கீழ்கண்ட விகிதப்படி அனுமதித்து உத்தரவிடப்பட்டுள்ளது.

**(தொகை ரூ.இலட்சம்)**

| அனுமதிக்கப்பட்ட தொகை | மத்திய அரசு மான்யம் | மாநில அரசு மான்யம் | நகராட்சி பங்கு தொகை |
|---|---|---|---|
| ரூ.42.00 | 7.00 | 13.00 | 22.00 |

எனவே மேற்கண்டவாறு அரசாணையில் உத்தரவிடப்பட்டுள்ளவாறு நகராட்சியின் பங்குத் தொகை ரூ.22.00 இலசட்சம் தொகையினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**
அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.673/2023/இ1)

**பொருள் : 03**

காரமடை நகராட்சி அருள்மிகு அரங்கநாதர் சுவாமி திருக்கோயில் தேர்த்திருவிழா நடைபெறுவதை முன்னிட்டு காரமடை நகராட்சி மூலம் 11 தாக்குகளுக்கு 19.02.2023 அன்று நகராட்சி அலுவலகத்தில் பகிரங்க ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி ஒவ்வொரு இனத்தில் அதிகபட்ச ஏலம் கோரியவர்கள் மற்றும் அதிக தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றுக்கொள்ளவும், ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி பெறப்படாத இனங்களுக்கு மறு ஏலம் கோரவும் நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று உத்தரவு வழங்கியது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**<u>11 தாக்குகள்</u>**

| வ. எண் | தாக்கு எண் / சர்க்கார் மதிப்பு (ரூ) | ஏலம் கோரியவர்கள் (திருவாளர்கள்) | ஏலத் தொகை (ரூ) | ஒப்பந்தப்புள்ளி வழங்கியவர்கள் (திருவாளர்கள்) | ஒப்பந்தப்புள்ளி தொகை (ரூ) | அதிகபட்ச ஏலம் / ஒப்பந்தப்புள்ளி தொகை (ரூ) |
|---|---|---|---|---|---|---|
| 1 | 1 – ரூ.72600/– | 1) கிருஷ்ணகுமார் | 75000 | 1)குழந்தைவேலு த/பெ.சுப்பையன் 59, குந்தாகாலனி, காரமடை | 166600 | 166600 |
| | | 2) பார்த்திபன் | 73700 | 2)கே.எஸ்.செந்தில் முருகன் த/பெ.கே.சாமிநாதன் 7/30, குமாரசாமி முதலியார் சந்து, காரமடை | 84421 | |
| 2 | 2 – ரூ.126500/– | ஏலம் கோர ஒருவரும் இல்லை | – | 1)ஹிமாயூன் கபீர் த/பெ.நைனா முகம்மது 368, பாலாஜி கார்டன், வீரபாண்டி | 153600 | 153600 |
| 3 | 3– ரூ.28600/– | ஏலம் கோர ஒருவரும் இல்லை | – | 1)ஹிமாயூன் கபீர் த/பெ.நைனா முகம்மது 368, பாலாஜி கார்டன், வீரபாண்டி | 41100 | 41100 |
| 4 | 4– ரூ.22440/– | 1) பார்த்திபன் | 25500 | ஒப்பந்தப்புள்ளி ஏதும் பெறப்படவில்லை | – | 26000 |
| | | 2) முருகேசன் | 26000 | | | |
| 5 | 5– ரூ.72930/– | 1) துரைசாமி | 75800 | ஒப்பந்தப்புள்ளி ஏதும் பெறப்படவில்லை | – | 75800 |
| | | 2) முருகேசன் | 75700 | | | |
| 6 | 6– ரூ.82500/– | 1) பார்த்திபன் | 83000 | ஒப்பந்தப்புள்ளி ஏதும் பெறப்படவில்லை | – | 83000 |
| | | 2) முருகேசன் | 82900 | | | |
| 7 | 7– ரூ.28160/– | 1) தங்கவேலு | 34200 | ஒப்பந்தப்புள்ளி ஏதும் பெறப்படவில்லை | – | 34200 |
| | | 2) ஷேக் அமானுல்லா | 34100 | | | |
| 8 | 8– ரூ.233860/– | 1) தினேஷ்குமார் | 234600 | 1) வி.செந்தில்குமார் த/பெ.வெள்ளிங்கிரி 87, அண்ணா வீதி, காரமடை | 266600 | 286000 |
| | | 2) ஸ்ரீதர் | 234700 | 2) எம்.தர்மராஜ் த/பெ.முருகேச முதலியார் 15, சொசைட்டி காலனி, காரமடை | 286000 | |
| | | – | – | 3) ஜி.ஆர்.ஸ்ரீதர் | 255700 | |
| | | – | – | 4) லியாகத் அலி | 169100 | |
| | | – | – | 5) கே.பி.சுந்தரம் த/பெ.பழனியப்பன் 32, கே.ஆர்.காலனி, காரமடை | 250900 | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 9 | 9– ரூ.202400/– | 1) பிரபு | ஏலம் ஒருவரும் கோரவில்லை | 1) எம்.ரமேஷ்குமார் த/பெ.மயில்சாமி காரமடை | 145000 | 300000 |
| | | 2) பெருமாள்சாமி | | 2) எ.தங்கவேல் த/பெ.அய்யாவு 6/7, மணிகண்டன் நகர், காரமடை | 246600 | |
| | | 3) கிருஷ்ண குமார் | | 3) எ.கண்ணன் த/பெ.அங்கமுத்து 23, மாரியாபுரம், காரமடை | 266000 | |
| | | 4) தினேஷ்குமார் | | 4) எ.மோகன் த/பெ.அண்ணாமலை | 300000 | |
| | | – | – | 5) எ.ஜெயந்தன் த/பெ.அங்கமுத்து 42எ, ஸ்ரீசக்தி கார்டன், ஈரோடு | 265000 | |
| | | – | – | 5) கே.பி.சுந்தரம் த/பெ.பழனியப்பன் 32, கே.ஆர்.காலனி, காரமடை | 176800 | |
| 10 | 10– ரூ.50000/– | 1) எ.மோகன் | 3404000 | 1) எ.சந்திரன் | 1302000 | 3404000 |
| | | 2) தர்மராஜ் | 3403000 | 2) ஆர்.பிரகாசம் | 1200100 | |
| | | 3) தினேஷ்குமார் | ஏலம் ஏதும் கோரவில்லை | 3) கௌதம் கருப்புசாமி | 2525252 | |
| | | 4) வேலுச்சாமி | 330000 | 4) ஜி.பிரபு | 2674000 | |
| | | 5) ரமேஷ் | 3401000 | 5) எஸ்.செந்தில்குமார் | 700000 | |
| | | 6) அப்துல் ரகுமான் | 3210000 | 6) எ.ஜெயந்தன் | 3030303 | |
| | | 7) யாசர் அராபத் | 2200000 | 7) எ.மோகன் | 2775000 | |
| | | 8) குழந்தைவேலு | 300000 | 8) எம்.சதாசிவம் | 1250000 | |
| | | 9) கதிரேசன் | 400000 | 9) பி.பாலச்சந்திரன் | 1200000 | |
| | | 10) கண்ணன் | 350000 | – | – | |
| | | 11) தமிழ்செல்வன் | 3400000 | – | – | |
| | | 12) பாலச்சந்தர் | 2500000 | – | – | |
| | | 13) சதாசிவம் | 21001000 | – | – | |
| | | 14) பிரபு | 2000000 | – | – | |
| | | 15) சந்திரன் | 3402000 | – | – | |
| | | 16) செந்தில்குமார் | 450000 | – | – | |
| 11 | 11– ரூ.25300/– | ஏலம் கோர ஒருவரும் இல்லை | – | ஒப்பந்தப்புள்ளி ஏதும் பெறப்படவில்லை | – | – |

<u>அலுவலக குறிப்பு :</u>

1) தாக்கு எண்–1க்கு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் ஒப்பந்தப்புள்ளி மூலமாக அதிக தொகை ரூ.166600/– அளித்த திரு.குழந்தைவேலு, த/பெ.சுப்பையன், காரமடை அவர்களின் ஒப்பந்தத்தை ஏற்று அனுமதி வழங்கலாம்.

2) தாக்கு எண்–2க்கு ஏலம் ஒருவரும் கோரவில்லை. ஒப்பந்தப்புள்ளி திரு.ஹிமாயூன் கபீர் என்பவரால் ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளதால் மறு ஏலம் கோர அனுமதிக்கலாம்.

3) தாக்கு எண்—3க்கு ஏலம் ஒருவரும் கோரவில்லை. ஒப்பந்தப்புள்ளி திரு.ஹிமாயூன் கபீர் என்பவரால் ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளதால் மறு ஏலம் கோர அனுமதிக்கலாம்.
4) தாக்கு எண்—4க்கு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் ஏலம் மூலமாக அதிக தொகை ரூ.26000/— கோரிய திரு.முருகேசன், காமராஜர் சாலை, காரமடை அவர்களின் ஒப்பந்தத்தை ஏற்று அனுமதி வழங்கலாம்.
5) தாக்கு எண்—5க்கு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் ஏலம் மூலமாக அதிக தொகை ரூ.75800/— கோரிய திரு.துரைசாமி, காரமடை அவர்களின் ஒப்பந்தத்தை ஏற்று அனுமதி வழங்கலாம்.
6) தாக்கு எண்—6க்கு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் ஏலம் மூலமாக அதிக தொகை ரூ.83000/— கோரிய திரு.பார்த்திபன், காரமடை அவர்களின் ஒப்பந்தத்தை ஏற்று அனுமதி வழங்கலாம்.
7) தாக்கு எண்—7க்கு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் ஏலம் மூலமாக அதிக தொகை ரூ.34200/— கோரிய திரு.தங்கவேலு, காரமடை அவர்களின் ஒப்பந்தத்தை ஏற்று அனுமதி வழங்கலாம்.
8) தாக்கு எண்—5க்கு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் ஒப்பந்தப்புள்ளி மூலமாக அதிக தொகை ரூ.286000/— அளித்த திரு.எம்.தர்மராஜ், காரமடை அவர்களின் ஒப்பந்தத்தை ஏற்று அனுமதி வழங்கலாம்.
9) தாக்கு எண்—9க்கு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் ஒப்பந்தப்புள்ளி மூலமாக அதிக தொகை ரூ.300000/— அளித்த திரு.எ.மோகன், த/பெ.அண்ணாமலை, காரமடை அவர்களின் ஒப்பந்தத்தை ஏற்று அனுமதி வழங்கலாம்.
10) தாக்கு எண்—10க்கு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் ஒப்பந்தப்புள்ளி மூலமாக அதிக தொகை ரூ.3404000/— அளித்த திரு.எ.மோகன், அவர்களின் ஒப்பந்தத்தை ஏற்று அனுமதி வழங்கலாம்.
11) தாக்கு எண்—11க்கு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி ஒருவரும் கோராததால் மறு ஏலம் கோர அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.254/2023/அ1)

<u>பொருள் : 04</u>

காரமடை நகராட்சி அருள்மிகு அரங்கநாதர் சுவாமி திருக்கோயில் தேர்த்திருவிழா நடைபெறுவதை முன்னிட்டு காரமடை நகராட்சி மூலம் மேற்கொள்ளப்படும் சிறப்பு பொது சுகாதார பணிகளுக்கு 19.02.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி ஒவ்வொரு இனத்தில் குறைந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றுக்கொள்ளவும், ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்படாத இனங்களுக்கு மறு ஏலம் கோரவும் நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>சிறப்பு பொது சுகாதாரப் பணிகள்</u>

<u>1.பந்தல் கொட்டகைகள் அமைத்தல்.</u>

| வ.எண் | விபரம் | ஒப்பந்தப்புள்ளி விபரம் | | குறிப்பு |
|---|---|---|---|---|
| | | ஸ்ரீரங்கா பேக்ஸ், காரமடை | கே.ஆர்.கே.ராஜேஷ், காரமடை | |
| 1 | காந்திமைதானம் பகுதியில் பந்தல் அமைத்தல். | ரூ.88,000/— | ரூ.90,000/— | |
| 2 | காரமடை அண்ணா பேருந்து நிலையத்தில் பந்தல் அமைத்தல். | ரூ.70,400/— | ரூ.75,000/— | |
| 3 | தண்ணீர் பந்தல் அமைத்தல். | ரூ.60,000/— | ரூ.73,000/— | |

**2.தற்காலிக கழிப்பிடம்.**

| வ.எண் | விபரம் | ஒப்பந்தப்புள்ளி விபரம் | | குறிப்பு |
|---|---|---|---|---|
| | | அருண்குமார் | சதீஸ் பந்தல் | |
| 1 | மொபைல் டாய்லெட் | ரூ.2414/— | ரூ.2519/— | |
| 2 | மொபைல் யூரினல் | ரூ.3414/— | ரூ.3519/— | |

**3.சிறப்பு பொது சுகாதார பணிக்கு பொது சுகாதார உபகரணங்கள் சப்ளை செய்தல்.**
ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது

**4.சிறப்பு பொது சுகாதார பணிக்கு ஆட்கள் சப்ளை செய்தல்.**
ஒப்பந்தப்புள்ளி ஒருவரும் கோரவில்லை.

**5.தண்ணீர் லாரிகள் தண்ணீருடன் விநியோகம் செய்தல் மற்றும் தற்காலிக சின்டெக்ஸ் டேங்க் அமைத்து குடிநீர் விநியோகம் செய்தல்.**
ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது

**அலுவலக குறிப்பு :**
1) பந்தல் கொட்டகைகள் அமைக்கும் பணிக்கு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர்.ஸ்ரீரங்கா பேக்ஸ் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று அனுமதிக்கலாம்.
2) தற்காலிக கழிப்பிடம் அமைக்கு பணிக்கு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.அருண்குமார் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று அனுமதிக்கலாம்.
3) பொது சுகாதார உபகரணங்கள் சப்ளை செய்தல் பணிக்கு ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் வரப்பெற்றதால் மறு ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதிக்கலாம்.
4) பொது சுகாதார பணிக்கு ஆட்கள் சப்ளை செய்தல் பணிக்கு ஒருவரும் ஒப்பந்தப்புள்ளி வரப்பெறாததால் மறு ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதிக்கலாம்.
5) தண்ணீர் லாரி மற்றும் தற்காலிக சின்டெக்ஸ் டேங்க் அமைத்து குடிநீர் விநியோகம் செய்யும் பணிக்கு ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் வரப்பெற்றதால் மறு ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.254/2023/அ1)

**பொருள் : 05**

காரமடை நகராட்சி அலுவலகத்தில் பயன்படுத்தப்பட்டு வரும் ஜெராக்ஸ் இயந்திரத்திற்கு தேவையான டோனர்கள் விநியோகம் செய்யும் பணிக்கு 10.02.2023 அன்று கீழ்காணும் விபரப்படி விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| 1. | திருவாளர்.சிக்மா பிசினஸ்லிங்க், கோவை | ரூ.9950/— |
| 2. | திருவாளர்.டிரீம்டெக், கோவை | ரூ.9000/— |
| 3. | திருவாளர்.சாய் பிரிண்டர்ஸ் அன்டு காப்பியர்ஸ், கோவை | ரூ.9450/— |

மேற்கண்ட விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள திருவாளர்.டிரீம்டெக், கோவை அவர்களின் விலைப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**
அனுமதி வழங்கலாம். அவசர அவசியம் கருதி மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று விநியோக உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.
(ந.க.எண்.2087/2022/இ1)

**<u>பொருள் : 06</u>**

காரமடை நகராட்சிக்குட்பட்ட பகுதியில் தெருவிளக்கு மின் கம்பங்களில் புதியதாக தானியங்கி சுவிட்சுகள் 25 இடங்களில் அமைக்கவும், அதற்காகும் செலவினத் தொகை ரூ.4.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>**

பொது மக்களின் அத்தியாவசியத்தை கருதியும், மின் சிக்கனத்தை கருதியும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.672/2023/இ1)

**<u>பொருள் : 07</u>**

காரமடை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.26 மற்றும் 27 கோவை–மேட்டுப்பாளையம் சாலையில் உள்ள மேம்பாலத்தில் 21 எண்கள் மின் விளக்குகள் எரியாமல் உள்ளது. இதனால் போக்குவரத்திற்கும், பொது மக்களுக்கும் மிகவும் சிரமமாக உள்ளது. எனவே மேற்கண்ட மின் விளக்குகள் புதுப்பிக்க ஆகும் செலவினத் தொகை ரூ.4.75 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>**

பொது மக்களின் அத்தியாவசியமும் மற்றும் வாகன ஓட்டிகளின் நலன் கருதியும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.672/2023/இ1)

**<u>பொருள் : 08</u>**

காரமடை நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள தெருவிளக்கு கம்பங்களில் உள்ள தானியங்கி சுவிட்சுகள் பழுதடைந்துள்ளதால் அதனை இயக்க இயலாத நிலையில் உள்ளது. எனவே இவற்றை பழுது பார்க்க ஆகும் செலவினம் ரூ.72,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.672/2023/இ1)

**<u>பொருள் : 09</u>**

காரமடை நகராட்சியில் 22.02.2023ம் தேதியில் கீழ்காணும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்து வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | காரமடை நகராட்சி பம்பிங் மெயின், பகிர்மான குழாய் மற்றும் பொது கழிப்பிடங்களுக்கு தேவையான குடிநீர் உதிரிபாகங்கள் சப்ளை செய்தல் மற்றும் குடிநீர் குழாய் உடைப்புகள் சரிசெய்தல். | 5.00 | திரு.ஆர்.எ.குப்புசாமி | 0.05 % மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திருவாளர்.ஸ்ரீதவமணி என்டர்பிரைசஸ் | 4.27 % மதிப்பீட்டிற்கு அதிகம் |

மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு.ஆ.எ.குப்புசாமி, கோயம்புத்தூர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :</u>**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.25/2023/இ1)

**பொருள் : 10**

காரமடை நகராட்சி குடிநீர் விநியோகத்தில் கிட்டாம்பாளையம் பகுதியில் உள்ள நீருந்து நிலையத்தில் பழைய குடிநீர் திட்டத்தில் உள்ள 2 எண்கள் 75 HP HSC மோட்டர் பம்ப் செட்களும் பழுதுபட்டு இயங்காமல் உள்ளது. இதனை பழுது பார்த்து இயக்கச்செய்தால் பொது மக்களுக்கு போதுமான அளவு சீரான முறையில் குடிநீர் வழங்க இயலும். எனவே மேற்கண்ட இரண்டு மோட்டார்கள், பம்ப் செட்டுகளை பழுது பார்க்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.2.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/26/2023)

**பொருள் : 11**

காரமடை நகராட்சி குடிநீர் விநியோகத்தில் கிட்டாம்பாளையம் பகுதியில் உள்ள நீருந்து நிலையத்தில் புதிய திட்டத்தில் இயங்கி வந்த 15HP Openwell நீர்மூழ்கி மின்மோட்டார் பழுது ஏற்பட்டு இயங்காமல் உள்ளது. இதனை உடனடியாக பழுதுபார்க்க வேண்டியுள்ளது. இதனை சரிசெய்யவும், அதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.45,000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். இ1/27/2023)

**பொருள் : 12**

காரமடை நகராட்சி குடிநீர் விநியோகத்தில் தேக்கம்பட்டி பவானி ஆற்றில் கரையில் அமைந்துள்ள நீரேற்று நிலையத்தில் இயங்கி வந்த 50HP Vertical Turbine Pump Set Unit No-1 பழுதுபட்டுள்ளது. இதனை உடனடியாக பழுது பார்க்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.3.80 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். இ1/28/2023)

**பொருள் : 13**

காரமடை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.18 சிறுமுகை ரோடு செல்வம் வீடு முதல் மாணிக்கம் வீடு வரை மழைநீர் வடிகால் கட்ட வேண்டியுள்ளது. இதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். இ1/29/2023)

**பொருள் : 14**

காரமடை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.18 சிறுமுகை ரோடு பகுதியில் உள்ள பொது கழிப்பிடத்திற்கு செப்டிக் டேங்க், தடுப்புசுவர் மற்றும் கழிப்பிட பராமரிப்பு பணிகள் செய்ய வேண்டியுள்ளது. இதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.3.50 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். இ1/30/2023)

**பொருள் : 15**

காரமடை நகராட்சி பொது சுகாதார வாகனம் TN 40 S 0073 Tata Ace வாகனம் திடீரென பழுது ஏற்பட்டதை சரிசெய்ய பொது சுகாதார அவசர அவசியம் கருதி அரசு பதிவு பெற்ற பணிமனையில் கீழ்காணும் விபரப்படி 17.02.2023 ஆம் தேதி விலைப்புள்ளி பெற்றப்பட்டுள்ளது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி தொகை (ரூ) |
|---|---|---|
| 1 | பெஸ்ட் மோட்டார் ஒர்க்ஸ், மேட்டுப்பாளையம் | ரூ.29684/– |
| 2 | மேட்டுப்பாளையம் ஆட்டோ சர்வீஸ் சென்டர், திருப்பூர் | ரூ.30385/– |

மேற்கண்ட இரு விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி ஏற்று நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டதன் படி பட்டியல் பெற்று தொகை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**
அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.555/2023/எச்1)

**பொருள் : 16**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.25212/2022/SBM 2.0, தேதி.05.12.2022ல் தெரிவித்துள்ள வழிகாட்டுதல்களின்படி, காரமடை நகராட்சிக்கு சொந்தமான கீழ்காணும் 5 எண்ணம் சமுதாய கழிப்பிடங்களை தத்து கொடுக்கவும், அழகுபடுத்தவும், தனித்தனியாக விலைப்புள்ளிகள் பெற்று பணிகள் மேற்கொள்ளவும், அதற்காகும் செலவுத் தொகை ரூ.1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

1) மங்கலக்கரைப்புதூர்
2) சாஸ்திரி நகர்
3) தெப்பகுளம் ரோடு
4) ஜெ.ஜெ.நகர்
5) டி.ஜி.புதூர்

**அலுவலக குறிப்பு :**
அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.686/2023/எச்1)

**பொருள் : 17**

காரமடை நகராட்சியில் 16.02.2023ம் தேதியில் கீழ்காணும் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்து வைக்கப்படுகிறது.

| வ. எண் | விபரம் | நேரடி விலைப்புள்ளிகளின் விபரம் | |
|---|---|---|---|
| | | எவர் கிரீன் ரைடு, கோயம்புத்தூர் | எவர் கிரீன் பாயிண்ட், ஸ்ரீரங்கம் |
| 1 | BOV Repair (Motor, Battery, Key set, Tyre, Electrical Work and Body Full Work) | ரூ.93,700/- | ரூ.97,400/- |

குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர்.எவர் கிரீன் ரைடு, கோயம்புத்தூர் நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :</u>**
மன்றம் அனுமதிக்கலாம்.
**(ந.க.எண்.362/2023/எச்1)**

**<u>பொருள் : 18</u>**
காரமடை நகராட்சியில் திடக்கழிவு சேகரம் செய்ய போதிய வாகனம் இல்லாத நிலையில் SVT Traders நிறுவனம் மூலம் **2** எண்ணம் Tractor நாள் வாடகை முறையில் பயன்படுத்திக் கொள்ளப்பட்டு வந்த நிலையில் அதற்கான மன்ற அனுமதி காலம் **31.12.2022**ல் முடிவுற்றுள்ளதால் ஜனவரி–**2023** முதல் மார்ச்–**2023** வரை மூன்று மாதங்களுக்கு பொது சுகாதார அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டு வருவதையும், அதற்கான செலவினத் தொகை ரூ.**8.55** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>**
அனுமதி வழங்கலாம்
**(ந.க.எண்.எச்1/2418/2022)**

**<u>பொருள் : 19</u>**
காரமடை நகராட்சிக்கு புதிதாக JCB வாகனம் வாங்கப்பட்டுள்ளது. JCB வாகனத்தில் அசையும் பகுதிகள் அதிகம் என்பதால் உராய்வுக்காக கிரீஸ் கிரீஸ் கன் மூலம் ஏற்றப்படவேண்டும். கிரீஸ் சில்லறை செலவினத்தில் வாங்கும்பட்சத்தில் கூடுதல் செலவு ஏற்படும் என்பதால் இந்தியன் ஆயில் பாரத் பெட்ரோலியம் நிறுவன அமைப்பில் நேரடியாக **500** கிலோ கிரீஸ் மொத்தமாக கொள்முதல் செய்து இருப்பு வைக்கவும், அதற்காகும் செலவுத் தொகை ரூ.**1.50** இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>**
அனுமதி வழங்கலாம்.
**(ந.க.எண்.947/2023/எச்1)**

**<u>பொருள் : 20</u>**
காரமடை நகராட்சியில் பொது மற்றும் பொது சுகாதார பிரிவில் கீழ்காணும் வாகனங்கள் இயக்கப்பட்டு வருகிறது. வாகனங்கள் இயக்க தேவையான ஓட்டுநர்கள் திடக்கழிவு மேலாண்மை பணியில் பணி செய்துவரும் குழுப்பணியாட்களில் தகுதியுள்ள நபர்கள் வைத்து வாகனம் இயக்கப்பட்டு வருகிறது. தற்போது திடக்கழிவு மேலாண்மைப் பணி வெளிக்கொணர்வு முகமை மூலம் செயல்படுத்தப்படவுள்ளதால் நகராட்சிக்கு சொந்தமான வாகனங்களை இயக்க ஓட்டுநர்கள் இல்லாமல் போகும் என்பதால் தேவையான ஓட்டுநர்களை வெளிக்கொணர்வு முகமை மூலம் எடுத்து பயன்படுத்திக் கொள்ளவும், அதற்காகும் செலவுத்தொகைக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**1)** ஆணையாளர் வாகனம் – TN 40 AA 9712
**2)** பொறியாளர் வாகனம் – TN 40 AB 3342
3) நகர்மன்றத் தலைவர் வாகனம் – TN 40 AB 3312
4) பொது சுகாதார டிராக்டர் – TN 40 A 2002
5) பொது சுகாதார டிராக்டர் – TN 40 4033
6) பொது சுகாதார Tata Ace – TN 40 S 0073

7) பொது சுகாதார Ape Truck – TN 40 D 4125
8) JCB – ஓட்டுநர் + உதவியாளர் (2 ஓட்டுநர்கள்)

பயன்பாட்டில் உள்ள 8 வாகனங்கள் இயக்க ஒரே ஒரு ஓட்டுநர் மட்டுமே உள்ள நிலையில் மீதமுள்ள வாகனங்களை இயக்க தேவையான ஓட்டுநர்கள் 7 + 1 என 8 நபர்கள் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ஊதிய விகித முறைப்படி நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ.683/– வீதம் அதற்குரிய EPF, ESI Administration Charge முகமைதாரரின் சேவைக் கட்டணம் 5 முதல் 10% என கணக்கீடு செய்யும் வகையில்.

| | |
|---|---|
| 1) ஒரு நபர் நாள் ஒன்றுக்கு ஊதியம் ரூ.683/– x 8 நபர்கள் | = 5464.00 |
| 2) EPF, ESI Administration Charge 15.75% (ரூ.5464x15.75%) | = 860.58 |
| 3) முகமைதாரரின் நிர்வாகக் கட்டணம் 5 முதல் 10% அதிகபட்சம் 10% | = 546.40 |
| மொத்தம் | = 6870.98 |
| Round Off | = 6871.00 |
| மாதம் ஒன்றுக்கு ரூ.6871 x 30 | = 206130/- |
| ஆண்டுக்கு ரூ.206130 x 12 | =2473560/- |

மேற்படி வாகனங்களை இயக்க தேவையான 8 ஓட்டுநர்களுக்கு ஆண்டு செலவினத் தொகை ரூ.2473560/–பொது நிதியில் அனுமதிக்கவும், இப்பொருள் தொடர்பான நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**
அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.946/2023/எச்1)

**பொருள் : 21**

காரமடை நகராட்சி அருள்மிகு அரங்கநாதர் சுவாமி திருக்கோயில் தேர்த்திருவிழா நடைபெறுவதை முன்னிட்டு பொது சுகாதார அத்தியாவசிய பணி செய்ய தளவாட பொருட்கள் கொள்முதல் செய்ய பொது ஒப்பந்தப்புள்ளி இரண்டு முறை நடத்தியும் ஒரு நபர் மட்டும் ஒப்பந்தப்புள்ளி அளித்ததால் மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ரத்து செய்வதால் பொது சுகாதாரப் பணிக்கு அவசர அவசியம் கருதி கீழ்கண்ட பொருட்களை வாங்க குறுகிய கால விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் விபரம்.

| வ. எண் | விபரம் | நேரடி விலைப்புள்ளிகளின் விபரம் | |
|---|---|---|---|
| | | தினேஷ் பாம்போ புராடக்ட்ஸ் கோயம்புத்தூர் | கே.முனியப்பன் கோயம்புத்தூர் |
| 1 | தெருகூட்டும் பெரிய மூங்கில் சீமாறு – 1 ன் விலை (கொள்முதல் 200 எண்ணிக்கை) | ரூ.175/- | ரூ.190/- |
| 2 | வடிகால் சுத்தம் செய்யும் கரண்டி – 1 ன் விலை (50 எண்ணிக்கை) | ரூ.350/- | ரூ.375/- |

**அலுவலக குறிப்பு :**
மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.254/2023/அ1)

**பொருள் : 22**

காரமடை நகராட்சிக்கு சொந்தமான TN-40 A-2002 வாகனம் இயக்க முடியாத நிலையில் பழுது ஏற்பட்டுள்ளது. மேற்படி வாகனம் ஓராண்டுக்கு முன்பு பராமரிப்பு பணி மேற்கொண்டது. கடந்த ஓராண்டாக பராமரிப்பு பணிகள் ஏதும் செய்யப்படவில்லை. ஆதலால் பராமரிப்பு பணி செய்ய உத்தேச மதிப்பீடு கோரப்பட்டதில் அரசு பதிவு பெற்ற பணிமனையிலிருந்து பெறப்பட்ட விலைப்புள்ளியின் மதிப்பு ரூ.1.25 இலட்சம். பழுது நீக்கப் பணிகள் மேற்கொள்ள மன்ற ஒப்புதலுக்கு.

**அலுவலக குறிப்பு :**
மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.948/2023/எச்1)

**பொருள் : 23**

காரமடை நகராட்சி அருள்மிகு அரங்கநாதர் சுவாமி திருக்கோயில் தேர்த்திருவிழா நடைபெறுவதை முன்னிட்டு காரமடை நகராட்சி மூலம் 21.02.2023 ஆம் தேதி ஏலம் போகாத தாக்கு எண்.2,3 மற்றும் 11 ஆகிய இனங்களுக்கு மறு ஏலம் மற்றும் மறு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி ஒவ்வொரு இனத்தில் அதிகபட்ச ஏலம் கோரியவர்கள் மற்றும் அதிக தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றுக்கொள்ளவும் மற்றும் சிறப்பு பொது சுகாதார பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக்கொள்ளவும் நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**தாக்கு எண்.2,3 மற்றும் 11**

| வ. எண் | தாக்கு எண் / சர்க்கார் மதிப்பு (ரூ) | ஏலம் கோரியவர்கள் (திருவாளர்கள்) | ஏலத் தொகை (ரூ) | ஒப்பந்தப்புள்ளி வழங்கியவர்கள் (திருவாளர்கள்) | ஒப்பந்தப்புள்ளி தொகை (ரூ) | அதிகபட்ச ஏலம் / ஒப்பந்தப்புள்ளி தொகை (ரூ) |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 – ரூ.126500/– | 1) ஜி.ஆர்.ஞீதர் த/பெ.ரத்தினசாமி 106, கே.என்.பி ரோடு, காரமடை | 127000 | 1) கே.ஆர்.கே.ராஜேஷ் 4–5, செட்டியார் சந்து, காரமடை | 150322 | 176600 |
| | | 2) ஆர்.பிரகாசம் 10/6, கெம்பஜ்ஜ கவுடர் சந்து, காரமடை | 126900 | 2) கே.எஸ்.செந்தில் முருகன், 7/30, குமாரசாமி முதலியார் சந்து, காரமடை | 176600 | |
| | | – | – | 3) ஹிமாயூன் கபீர் 368, வீரபாண்டி கோவை | 161300 | |
| | | – | – | 4) டி.கதிரேசன் 31/50எ, சொர்க்கவாசல் வீதி, காரமடை | 152600 | |
| 2 | 3– ரூ.28600/– | ஏலம் கோர ஒருவரும் இல்லை | – | 1) கே.ஆர்.கே.ராஜேஷ் 4–5, செட்டியார் சந்து, காரமடை | 50522 | 61600 |
| | | – | – | 2) ஹிமாயூன் கபீர் 368, வீரபாண்டி, கோவை | 51100 | |
| | | – | – | 3) வி.செந்தில்குமார் 87, அண்ணா நகர், காரமடை | 61600 | |
| | | – | – | 4) எஸ்.சேக் அமானுல்லா 103/19எச், சிவன்புரம் காலனி, காரமடை | 57000 | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 3 | 11–<br>ரூ.25300/– | 1) ஜி.ஆர்.ஸ்ரீதர்<br>த/பெ.ரத்தினசாமி<br>106, கே.என்.பி<br>ரோடு, காரமடை | 30000 | 1) யாசர் அராபத்<br>9, காமராஜர் சாலை,<br>காரமடை | 32600 | 32600 |
| | | – | – | 2) எ.கண்ணன்<br>37, மாரியாபுரம்<br>காரமடை | 30000 | |

**<u>1.தண்ணீர் லாரிகள் தண்ணீருடன் விநியோகம் செய்தல் மற்றும் தற்காலிக சின்டெக்ஸ் டேங்க் அமைத்து குடிநீர் விநியோகம் செய்தல்.</u>**

| வ.எண் | விபரம் | எம்.செந்தில்முருகன், வெற்றிவேல் கம்யூனிகேசன்ஸ் | ஸ்ரீ அரங்கன் சர்வீஸ், 142/252, கூட்டுறவு பேங்க் கட்டிடம், காரமடை |
|---|---|---|---|
| 1 | 12000 லிட்டர் தண்ணீர் லாரிகள். | ரூ.5000/–,<br>சுத்தமான குடிநீர்<br>ரூ.5500/– | ரூ.4700/–,<br>சுத்தமான குடிநீர்<br>ரூ.4700/– |
| 2 | 6000 லிட்டர் தண்ணீர் லாரிகள். | ரூ.3000/–<br>சுத்தமான குடிநீர்<br>ரூ.3500/– | ரூ.2800/–<br>சுத்தமான குடிநீர்<br>ரூ.2700/– |
| 3 | 10 இடங்களில் 500 லிட்டர் சின்டெக்ஸ் டேங்க் ஸ்டாண்டுடன் வைத்து குடிநீர் விநியோகம் செய்தல். | ரூ.7000/– | ரூ.6600/– |

**<u>அலுவலக குறிப்பு :</u>**

1) தாக்கு எண்–2க்கு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் ஒப்பந்தப்புள்ளி மூலமாக அதிக தொகை ரூ.176600/– அளித்த திரு.கே.எஸ்.செந்தில்முருகன், காரமடை அவர்களின் ஒப்பந்தத்தை ஏற்று அனுமதி வழங்கலாம்.

2) தாக்கு எண்–3க்கு ஏலம் ஒருவரும் கோரவில்லை. ஒப்பந்தப்புள்ளி கோரியதில் ஒப்பந்தப்புள்ளி மூலமாக அதிக தொகை ரூ.61600/– அளித்த திரு.வி.செந்தில்குமார், காரமடை அவர்களின் ஒப்பந்தத்தை ஏற்று அனுமதி வழங்கலாம்.

3) தாக்கு எண்–11க்கு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் ஒப்பந்தப்புள்ளி மூலமாக அதிக தொகை ரூ.32600/– அளித்த திரு.யாசர் அராபத், காரமடை அவர்களின் ஒப்பந்தத்தை ஏற்று அனுமதி வழங்கலாம்.

4) தண்ணீர் லாரி மற்றும் தற்காலிக சின்டெக்ஸ் டேங்க் அமைத்து குடிநீர் விநியோகம் செய்யும் பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர்.ஸ்ரீ அரங்கன் சர்வீஸ், காரமடை நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.254/2023/அ1)**

**<u>பொருள் : 24</u>**

காரமடை நகராட்சி அண்ணா பேருந்து நிலையத்தில் உள்ள நவீன கட்டண கழிப்பிடத்தை 2022–2023 ஒரு ஆண்டிற்கு ஏலம் எடுத்த திரு.சந்தோஷ்குமார் என்பவர் மேற்படி கழிப்பிடத்திற்கு செல்லும் வழியில் காரமடை நகராட்சியில் கூடுதல் கட்டிடம் கட்டப்பட்டு வருவதால் கழிப்பிடத்திற்கு மக்கள் எவரும் வராததால் கழிப்பிடம் செயல்படாமல் உள்ளது எனவும் இதனால் நவீன கழிப்பிடத்தை தொடர்ந்து நடத்த இயலாததால் 31.03.2023 முதல் திரும்ப நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்வதாக ஏலதாரரால் விண்ணப்பம் அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி விண்ணப்பத்தின்பேரில் உரிய நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :</u>**

மன்றம் அனுமதிக்கலாம். மேலும் அலுவலக விரிவாக்கப் பணி மேற்கொள்ளப்பட்டு வருவதால், மேற்கண்ட கழிப்பிடத்திற்கு அணுகுபாதை இல்லாததால் இவ்வினத்தை வரியில்லா இனத்திலிருந்து நீக்கம் செய்யலாம்.

**(ந.க.எண்.559/2022/அ1)**

**<u>பொருள் : 25</u>**

காரமடை நகராட்சி வார்டு எண்.24 காமராஜர் சாலையில் பரிவேட்டை மைதானம் பகுதியில் உள்ள சமுதாய கழிப்பிடத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகள் சரிசெய்யப்பட்டும், பக்தர்களின் பயன்பாட்டிற்கு குளியல் அறை கட்டும் பணியும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி சமுதாய கழிப்பிடத்தை அதிகளவில் பொது மக்கள் பயன்படுத்துவதால் சமுதாய கழிப்பிடத்தை நவீன கட்டண கழிப்பிடமாக மாற்றி ஏலம் விடப்பட்டால் நகராட்சிக்கு வருவாய் ஈட்டப்படும். மேலும் நவீன கட்டண கழிப்பிடமாக மாற்றினால் ஏலதாரர்கள் கழிப்பிடத்தை சுத்தமாக பேணவும் வாய்ப்பு உள்ளது. எனவே மேற்படி சமுதாய கழிப்பிடத்தை நவீன கட்டணம் கழிப்பிடமாக மாற்றி ஏலம் விட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.559/2022/அ1)

**<u>பொருள் : 26</u>**

திரு.க.ரவிக்குமார், 5வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் தீர்மானங்களை வாசித்தல்.

1) பொன்விழா நகரில் 2" குழாயை மாற்றி 3" குழாய் பதித்தல்.
2) செம்மொழி நகரில் மின் கம்பத்திலிருந்து மின் இணைப்பு கம்பம் எண்.4ற்கு தருவது மற்றும் பள்ளிவாசல் வீதி 2 கம்பத்திற்கு மின் விளக்கு பொருத்துதல்.
3) மண்கண்டன் நகரில் புதிய மின் கம்பம் (கோயில் அருகில்) அமைத்து கொடுப்பது.
4) ராயல் கார்டன் பகுதியில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்தல்.
5) மணிகண்டன் நகரில் 2" பைப் ராயல் கார்டன் எதிரில் 3" பைப் மாற்றுவது.
6) மெட்ரோ பள்ளி பின்புறம் சாலை பழுதடைந்துள்ளதை சீரமைத்தல்.
7) வி.ஐ.பி.நகரில் முன்புறம் உள்ள மின் கம்பத்தில் மின் விளக்கு பொருத்துதல்.
8) பொன்விழா நகரில் ஏற்கனவே உள்ள போர்வெல் சின்டெக்ஸ் டேங்கை மாற்றி அதிக கொள்ளளவு கொண்ட சின்டெக்ஸ் டேங்க் பொருத்துதல்.

ஒ.ம்/ திருமதி.உஷா வெங்கடேஷ்
நகரமன்றத் தலைவர்,
காரமடை நகரமன்றம்.

**<u>28.02.2023 ஆம் நாள் நடைபெற்ற நகரமன்ற சாதாரணக் கூட்டத்தின் தீர்மானங்கள்</u>**

**<u>பொருள் எண்.01</u>**

பதிவு செய்யப்பட்டது.

**<u>பொருள் எண்.02 முதல் 18 முடிய</u>**

அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.19</u>**

அவ்வப்போது பங்கிலிருந்து பெறவும், இத்தீர்மானத்தை ரத்து செய்யவும் தீர்மானிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.20 முதல் 25 முடிய</u>**

அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.26</u>**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஒ.ம்/ திருமதி.உஷா வெங்கடேஷ்
தலைவர்,
காரமடை நகர்மன்றம்